[திரு. என். வரதராஜன்] [1983 பிப்ரவரி 8

நடைபெறவில்லை என்ற குறை உண்மை. அங்கே நடைபெறும் கூட்டங்களைப் பற்றி தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு ரிக்கார்டுகள் அனுப்பி, அதை வைத்து அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வது என்ற முறையில் இருந்தால், அந்த ஆலோசனைக் குழு கூட்டங்கள் வெற்றிகரமாக இருக்கும். அந்த வகையில் அதை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வெற்றிகரமாக நடத்தவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மேல்மட்ட அதிகாரிகளின் துணை தேவை என்றாலும் மேல்மட்ட அதிகாரிகளின் துணை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். எந்தெந்தத் தேதியில் குழுக் கூட்டம் நடைபெற்றது, யார் யார் அதிலே கலந்து கொண்டார்கள், யார் யார் கலந்துகொள்ளவில்லை என்ற விவரங்களை கையிலே வைத்துக்கொண்டுதான் நான்பேசுகிறேன். நம்முடைய நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்குத்தான் குறிப்பிட்டேன். சில இடங்களில் நடைபெறுகிற கூட்டங்களில் பெரும்பாலான நேரங்களில் அதிலே மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வது இல்லை.

கொல்லிமலையிலுள்ள குக்கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கும் திட்டம்.

* வினா எண். 173—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் கொல்லிமலையில் உள்ள 253 குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) கொல்லிமலையிலுள்ள 253 குக்கிராமங்களில் ஐந்து குக்கிராமங்களுக்கு மட்டும் தான் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அவற்றின் விவரம் பின்வருமாறு:—

(1) செம்மேடு, (2) வசலூர்பட்டி, (3) சோளக்காடு, (4) சேலூர் கஸ்பா, (5) சோளக்காட்டுப்பட்டி.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, மீதியுள்ள 250 குக்கிராமங்களுக்கும் எப்போது மின் வசதி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது? அல்லது மின் வசதி அளிக்க ரூரல் எலக்டிரிபிகேஷன் கார்ப்பரேஷனிடம் கடன் வாங்கி அந்தக் கிராமங்களுக்கு மின் இணைப்புத் தர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, போக்குவரத்து, சாலைவசதி இன்மையாலும், கம்பித் தொடர்களைக் காடுகளின் வழியாக இழுத்துச் செல்வதற்கு இந்திய அரசின் ஒப்புதல் தேவைப்படுவதாலும், அதிலே பெரிய கால தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. அண்மையில் இது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டு, வேறு மாற்றுத் திட்டத்தின் மூலம் அமல்படுத்தலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். மலைக் காடுகளிலுள்ள சிற்றூர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க நெடுந்தூரம் கம்பித் தொடர்கள் இழுத்துச் செல்வதற்கு மாறாக அங்கேயே டீசல் செட்டை அரசாங்கமே வாங்கிவைத்து அதன் மூலம் அந்த மின் வசதியை அவர்களுக்குத் தரலாமா என்று பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, புதிதாக ஜெனரேட்டர் பொருத்தி மின் வசதி அளிக்கும் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜெனரேட்டருக்கு ஆகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா அல்லது அங்கேயுள்ள பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசே ஏற்றுக்கொள்ளும்.

மைய அரசின் அனுமதிக்காக மாநில அரசு அனுப்பியுள்ள மின் திட்டங்கள்

*குறுகிய கால வினா எண். 2—மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மைய அரசின் அனுமதிக்காக மாநில அரசு அனுப்பியுள்ள அனல், புனல் மின் திட்டங்களின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

புனல் மின் திட்டங்கள்—

1	பைக்காரா இறுதி நிலை நீர் மின் திட்டம்.	110 மெ. வா.
2	சிறுவாணி சிறிய நீர் மின் திட்டம்	3 மெ. வா.

அனல் மின் திட்டங்கள்—

1	வட சென்னை அனல் மின் திட்டம்	1050 மெ. வா.
2	மேட்டூர் அனல் மின் திட்ட விரிவாக்கம்	420 மெ. வா.
3	தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம்	710 மெ. வா.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS